# சுகாதார மதிப்பாய்வு : திருவல்லிக்கேணி மற்றும் ராயபேட்டை







## ரோஷ்னியை சார்ந்த சுய உதவி பெண்களால் மேற்கொள்ளப்பட்டது

'நமது நகரம், நமது உரிமை'

**June 2018**

ROSHNI Signifies light

PRAJNYA

| எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | **சுருக்கம்** | **3 - 4** |
| 2 | **அறிமுகம்** | **4 - 6** |
| 3 | **ஆய்வுமுறை** | **6 - 7** |
| 4 | சுகாதார மதிப்பாய்வின் மூலம் கண்டறிந்தவைகள் | **7 - 12** |
| 5 | பரிந்துரைகள் | **12 - 14** |
| 6 | **இணைப்பு I : சுகாதார மதிப்பாய்விற்கான படிவம்** | **15 - 19** |

<u>சுருக்கம்</u>

'நமது நகரம், நமது உரிமை' என்பது பெண்களுக்காக வடிமைக்கப்பட்ட குடியுரிமை விழிப்புணர்வுக்கான செயலாக்கம் ஆகும். இந்த திட்டமானது, கற்பித்தல் மற்றும் செயல்பாடு ஆகியவற்றை நோக்கமாகவும், பல கட்டங்களை கொண்டும் வடிமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த திட்டம், சென்னையை சார்ந்த பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ரோஷ்னி என்ற அமைப்புடன் இணைந்து, மேற்கொண்ட இந்த திட்டத்தின் ஒரு அம்சமான "சுகாதாரம்" பற்றிய ஆய்விற்கான அறிக்கையே இது. பிரக்ஞா, ரோஷ்னியை சார்ந்த ஐந்து சுய உதவி குழு பெண்களை ஊக்குவித்து, சென்னையில் திருவல்லிக்கேணி மற்றும் இராயப்பேட்டை ஆகிய இடங்களில் இந்த ஆய்வினை மேற்கொண்டது.

அவர்கள் கீழ்கண்ட அளவுகோல்களை கொண்டு, இந்த ஆய்வினை மேற்கொண்டனர்:

**கழிவறை பயன்பாடு:** மலம் கழிக்கும் முறை; கழிவறையின் விதங்கள்; கழிவறையின் பயன்பாடு; கழிவறையை பகிர்ந்து கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை; கழிவறையில் தண்ணீர் விநியோகம்.

கழிவு நீர் வடிகால் வசதி: கழிவு நீர் வடிகால் வசதிக்கான நிலைப்பாடு; கழிவு நீர் தேக்கம்; கழிவு நீர் தேங்கியிருக்கும் கால வரையறை; மாநகராட்சி சாக்கடையை சுத்தம் செய்வதற்கான கால நிர்ணயம்.

திட கழிவு: வீட்டினருகில் திட கழிவு குவிந்திருக்கும் நிலை; வீடுகளிலிருந்து திட கழிவுகளை சேகரிப்பதற்கான கால வரையறை; வீடுகளிலிருந்து கழிவுகளை அகற்றும் முறை.

ஆய்வின் மூலம், கண்டறிந்தவைகளில் முக்கியமானவை:

1. இந்த பகுதிகளில், தெருக்கள்தோறும் மாட்டின் சாணம் சிதறி கிடப்பது மிகப்பெரிய பிரச்சனையாகும்.
2. தெருக்களில் குப்பை தொட்டிகள் இல்லாமல் இருப்பதும், குறைந்து காணப்படும் நிலையும், மக்களை தெருவில் குப்பைகளை கொட்டுவதற்கு ஊக்குவிக்கிறது.
3. ஜன நெருக்கடியுள்ள தெருக்களில் அமைந்துள்ள குப்பை தொட்டிகளை அடிக்கடி சுத்தம் செய்யாமல் விடுவதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.
4. பொது சிறுநீர் கழிப்பிடத்தை முறையாக பயன்படுத்தாமை மற்றும் சரியான பராமரிப்பின்மையால், தெருக்களில் துர்நாற்றம் வீசும் நிலை உருவாகிறது.

## அறிமுகம்

ஒவ்வொரு குடிமக்களுக்கும், தன்னுடைய நகரத்தை அமைப்பதற்கான உரிமை உள்ளது. இந்த உரிமை பல்வேறு வகையான உரிமைகளை தன்னகத்தே கொண்டுள்ளது: பாதுகாப்பிற்கான உரிமை, ஆற்றல், தண்ணீர், தூய்மை, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை அணுகுவதற்கான உரிமை என்பனவாகும். பெரும்பான்மையான மக்களுக்கு, அவர்களுடைய உரிமைகளை பற்றிய விழிப்புணர்வு இல்லாததால், அவர்கள்

அதனை கோர இயலவில்லை. ஒரு நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு, தாங்கள் பாதுகாப்பாகவும், வசிக்க ஏற்றதாகவும், அந்த நகரத்தை உருவாக்கவும், மாற்றியமைக்கவும் உரிமையுள்ளது. உதாரணமாக, இந்தியாவின் நகரங்களில் குறைந்த சுகாதார வசதிகள் இருப்பதால், பாதுகாப்பான, எளிதில் அணுகக்கூடிய வகையில் அவை அமைய கிடைப்பது, தங்களுடைய உரிமை என்பதை பெண்கள் அறிவது மிகவும் முக்கியமாகும். குடிமை உரிமைகளை பற்றிய விழிப்புணர்வை பெண்களிடம் ஏற்படுத்தி, அவர்கள் வசிக்கும் நகரத்தை சொந்தம் கொண்டாடும் வகையில், இந்த 'நமது நகரம், நமது உரிமை' என்ற விழிப்புணர்வு செயலாக்கத்தை பிரக்ஞா வடிவமைத்துள்ளது.

"நமது நகரம், நமது உரிமை"யின் குறிகோள்கள்:

- குடிமை உரிமைகளை பற்றிய விழிப்புணர்வை பெண்களிடம் ஏற்படுத்தி, தங்கள் நகரங்களை சொந்தம் கொண்டாடும் வகையில் அவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது.
- தங்களுடைய குடிமை உரிமைகளை கோரும் போது, தங்கள் வட்டாரத்திற்கு தொடர்புடைய, பொருத்தமான தகவல்களை சேகரித்து, ஆவணப்படுத்தி, ஒழுங்குப்படுத்தி, அறிக்கையாய் வழங்குவதற்கு இயலுமாறு தயார்ப்படுத்துவது.

பல கட்டங்களை கொண்ட 'நமது நகரம், நமது உரிமை' என்ற செயலாக்கம், பல குடிமை பிரச்சனைகளை கையாளுகிறது: பாதுகாப்பு, தண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து, பொழுதுபோக்கு மற்றும் தேர்ந்தெடுக்கும் ஜனநாயகம் போன்றவை.

ரோஷ்னியின் சுய உதவி குழுவை சார்ந்த பெண்கள், 'நமது நகரம், நமது உரிமை'யின் மூன்றாவது கட்டத்தில், தாங்கள் கண்டறிந்தவைகளை, இந்த அறிக்கையின் மூலம் ஆவணப்படுத்துகின்றனர். இந்த கட்டத்தில், 'சுகாதாரம்' பற்றிய கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதற்கான மதிப்பாய்வினை திருவல்லிக்கேணி மற்றும் இராயபேட்டை பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களிடம் மேற்கொண்டுள்ளனர்.

## ஆய்வுமுறை

பெண்கள், சுத்தமான, பாதுகாப்பான சுகாதார வசதிகளை அணுகுவதற்கான தங்களுடைய உரிமைகளை நிலைநிறுத்தி, உறுதிப்படுத்துவதற்காகவே இந்த மதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

'நமது நகரம், நமது உரிமை'யின் மூன்றாவது கட்டத்தின் போது, ரோஷ்னியின் சுய உதவி குழுக்களை சேர்ந்த ஐந்து பெண்கள், வீட்டுக்கு வீடு சென்று இந்த மதிப்பாய்வினை திருவல்லிக்கேணி மற்றும் இரயாபேட்டை பகுதிகளில் கீழ்க்கண்ட தெருக்களில் மேற்கொண்டனர்.

- திருவல்லிக்கேணி பகுதியை ஜலீலா, ரமணி மற்றும் விஜயலட்சுமி மதிப்பாய்வு செய்தனர்:
  மல்லன் பொன்னப்பன் தெரு, சூரப்பன் தெரு, தேவராஜ் முதலி தெரு, ஹக்கீம் மக்ஹ்தூம் அஷ்ரப் தெரு, காயிதே மில்லத் தெரு, ராமசாமி தெரு, தானப்பா தெரு, நெசவாளர் தெரு, முசப்பார் ஜங் பகதூர் தெரு, பள்ளப்பன் தெரு, ஜானி ஜான் கான் தெரு, ஷேக் தாவூத் தெரு, . கோயில் தெரு, சுந்தர மூர்த்தி விநாயகர் கோயில் தெரு, செங்கல்வராயன் தெரு, தாண்டவராயன் தெரு, உலகப்பன் தெரு, சாமி

பிள்ளை தெரு, நகோஜி தெரு, சிங்கோசரி தெரு, தேரடி தெரு, , நாயக்கன் தெரு, . பெசன்ட் தெரு , . நம்மாழ்வார் தெரு, இருசப்பா முதல் மற்றும் இரண்டாவது தெரு, கஜபதி முதல் மற்றும் இரண்டாவது தெரு, ராம் நகர் மெயின் ரோடு, முனுசாமி நகர், கந்தப்பன் தெரு, ராஜாஜி நகர், முருகப்பா தெரு, .. பிள்ளை தெரு, நரசிம்ஹா சந்து, பொன்னப்பர் தெரு, பெரியமலையப்பன் தெரு.

- **இராயபேட்டை பகுதியை சந்தானலட்சுமி மற்றும் நைனம்மா மதிப்பாய்வு செய்தனர்:**

  **ஜவஹர் ஹுசைன் கான் தெரு**, முஹம்மத் ஹுசைன் தெரு, முத்தையா முதல் மற்றும் இரண்டாம் தெரு, சைவ முத்தையா தெரு, செல்லம்மாள் தோட்டம் முதல் மற்றும் இரண்டாவது தெரு, திருநாவுகரசு தெரு, அங்கமுத்து தெரு, ஷர்புதீன் கார்டன் தெரு, அகதி முத்தன் தெரு, . நியமதுல்லா தெரு, சுப்ரமணிய தோட்டம் தெரு, கபூர் முதல் மற்றும் இரண்டாவது தெரு.

<u>சுகாதார மதிப்பாய்வின் மூலம் கண்டறிந்தவை</u>

<u>1. கழிவறை பயன்பாடு:</u>

திருவல்லிக்கேணி மற்றும் இராயபேட்டை பகுதியில் மேற்கொண்ட ஆய்வின்படி, அந்த பகுதிகளில் வசிக்கும் குடும்பங்கள் மலம் கழிப்பதற்கு கழிவறையையே பயன்படுத்துகின்றனர். இதனால் திறந்த வெளியில் மலம் கழிப்பது அறவே கடைப்பிடிக்கப்படவில்லை. பெரும்பாலான குடும்பங்கள், வட நாட்டு பாணியை விட, இந்திய பாணி கழிவறையையே

பயன்படுத்துகிறார்கள். (அவர்களில் 81% மக்கள் திருவல்லிக்கேணியிலும் மற்றும் 97% நபர்கள் இராயபேட்டையிலும், இந்திய பாணி கழிவறையை பயன்படுத்துகிறார்கள்).







திருவல்லிக்கேணியில், குறைந்த சதவிகித வீடுகளில் கழிவறை இணைந்து கட்டப்பட்டுள்ளது (3%); பெரும்பான்மையான குடும்பங்கள் மற்ற குடும்பங்களுடன் கழிவறையை பகிர்ந்து கொள்கின்றனர் (89%); மேலும் மிக குறைந்த சதவிகித மக்களே பொது கழிப்பிடத்தை பயன்படுத்துகின்றனர். கழிவறையை பகிர்ந்து கொள்ளும் குடும்பங்களில், பெரும்பாலும் இரண்டு குடும்பங்கள் ஒரு கழிவறையை பயன்படுத்துகிறார்கள் (78%); 19% பேர் மூன்று குடும்பங்களுடன் ஒரு கழிவறையை பயன்படுத்துகிறார்கள்; மூன்று சதவிகித நபர்கள் மூன்று குடும்பங்களுக்கு மேல், ஒரு கழிவறையை உபயோகிக்கின்றனர்.

இராயபேட்டையில், இந்த சூழ்நிலை முற்றிலும் வேறுபடுகின்றது. 92% நபர்களின் வீடுகளில் கழிவறை இணைந்து கட்டப்படுள்ளது, ஆறு சதவிகித

குடும்பங்கள் இதர குடும்பங்களுடன் கழிவறையை பகிர்ந்து கொள்கின்றனர், இரண்டு சதவிகித நபர்கள் பொது கழிவறையை பயன்படுத்துகிறார்கள். கழிவறையை பகிர்ந்து கொள்ளும் குடும்பங்களில், 96% குடும்பங்கள், ஒரு கழிவறையை மற்றுமொறு குடும்பத்துடன் பகிர்ந்து பயன்படுத்துகிறார்கள், மூன்று குடும்பங்கள் ஒரே கழிவறையை பயன்படுத்துவது என்பது மிகவும் குறைந்து காணப்படுகிறது (4%).

இரண்டு பகுதிகளிலும், பெரும்பான்மையோர், கழிவறையில் பயன்படுத்துவதற்கு தண்ணீரை வெளியிலிருந்து உள்ளே கொண்டு செல்கின்றனர். கழிவறையினுள்ளே தண்ணீர் வசதி காணப்படவில்லை (திருவல்லிக்கேணியில் 83% மற்றும் 75% இரயாபேட்டையில்).

<u>2. கழிவு நீர் கால்வாய் வசதி</u>

இரண்டு பகுதிகளிலும், பெரும்பாலும் அனைத்து வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர், பாதாள சாக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது (திருவல்லிக்கேணியில் 99% மற்றும் 98% இரயாபேட்டையில்).






இரண்டு பகுதிகளிலும், பெரும்பான்மையான குடும்பங்கள், தங்களது வீடுகளுக்கு அருகில் கழிவு நீர் தேக்கமடையவில்லை என்றே கூறியுள்ளனர் (திருவல்லிக்கேணியில் 92% மற்றும் 93% இரயாபேட்டையில்). ஆனால் மழை காலங்களில், இதே சூழல் அமைவதில்லை.







மழை காலங்களில், கழிவு நீர் தெருக்களில் தேங்குவது என்பது தீராது தொடரும் பிரச்சனையாக உள்ளது. திருவல்லிக்கேணியில் 99% குடும்பங்களும், 100% இராயபேட்டையிலும் இந்த பிரச்சனையை எதிர்கொள்கின்றனர்.

இரண்டு பகுதிகளிலும் 98% நபர்கள் மாநகராட்சி ஊழியர், கழிவு நீரை சுத்தப்படுத்துவதாய் கூறுகின்றனர், ஆனால் அது வழக்கமானதன்று. திருவல்லிக்கேணி (76%) மற்றும் இரயாபேட்டையில் (50%). பெரும்பான்மையோர், வாரத்தில் ஒரு நாள் கழிவு நீர் சுத்தப்படுத்தப்படுவதாக கூறுகின்றனர்.







<u>3. திட கழிவு மேலாண்மை</u>

இரண்டு பகுதிகளிலும், பெரும்பாலானவர்கள், தாங்கள் வசிக்கும் பகுதியில் குப்பை குவிந்து கிடப்பதாக கூறியுள்ளனர் (திருவல்லிக்கேணியில் 94% மற்றும் 95% இரயாபேட்டையில்). மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால், தினமும் மாநகராட்சி ஊழியர் தெருக்களை சுத்தம் செய்தாலும், குப்பை ரோடுகளில் காணப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

பெரும்பான்மையானவர்கள் தினமும் மாநகராட்சி ஊழியர், வீட்டுக்கு வீடு வந்து குப்பைகளை சேகரித்து செல்வதாக கூறியுள்ளது மகிழ்ச்சியை தருகின்றது. (திருவல்லிக்கேணியில் 73% மற்றும் 90% இரயாபேட்டையில்).







<u>பரிந்துரைகள்</u>

- மழை காலங்களில், கழிவு நீர் தெருக்களில் தேங்குவதை பொது பிரச்சனையாக, இரண்டு பகுதிகளையும் சார்ந்த பெரும்பான்மையோர் சுட்டியுள்ளனர். இந்த பிரச்சனையை கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அத்தியாவசியமானதாகும்.
- தெருக்களில் குப்பை தொட்டிகள் இல்லாமலோ, அல்லது எண்ணிக்கையில் குறைந்தோ காணப்படுகிறது. இந்த தெருக்கள், பெரும்பாலும், ஜன நடமாட்டம் அதிகமுள்ள இடமாக இருப்பதோடு, கடை தெருக்களாகவும், காய்கறி வியாபாரிகள் மிகுந்தும் காணப்படுகிறது. இதனால் குப்பை தொட்டிகள், காய்கறி கழிவுகள்

தெருக்களில் மிகுந்து காணப்படுகின்றன. இதனால் பல சமயங்களில் வாகன நெருக்கடி ஏற்பட்டு, அவ்வழியில் பயணிப்போருக்கு, பெரும் பேரிடராக அமைகிறது. அதிகமான குப்பை தொட்டிகளை அங்கே நிறுவுவது மிகவும் அவசியமானது.

- அதிக குடும்பங்கள், மற்றொரு குடும்பத்துடன் கழிவறையை பயன்படுத்துகிறார்கள். அனைவருக்கும் வீட்டுடன் இணைந்து கழிவறை கட்டிவதற்கு வழி வகுத்தல் அவசியமாகும்.

**திருவல்லிக்கேணி:**

- .. நாயக்கன் தெருவிலுள்ள கெல்லட் மேல்நிலை பள்ளியின் முன்னால் இருக்கும் குப்பை தொட்டி நல்ல விதத்தில் பராமரிக்கப்படுவதில்லை. அதனால் மிகுந்த தூர்நாற்றம் வீசுவதுடன், அப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மிகுந்த உடல் நல கேடு விளைவிக்கக்கூடியதாய் விளங்குகிறது.
- மழை காலங்களில் மட்டுமல்லாமல், இதர காலங்களிலும், கழிவு நீர் கசிவு ஏற்பட்டு, வீதிகளில் தேங்கியிருப்பது பெரும் கவலைக்குரிய விஷயமாக இருக்கிறது.
- காய்கறி கழிவுகள், தெருவில், குறிப்பாக .. நாயக்கன் தெருவில், மிகுந்து அங்காங்கே சிதறி கிடப்பதை தவிர்க்க, அதிக அளவில் குப்பை தொட்டிகளை அங்கு நிறுவினால் உதவியாக இருக்கும்.
- மாட்டின் சாணம் தெருக்கள் முழுவதும் சிதறி இருப்பது, (குறிப்பாக தேவராஜ் முதலி தெரு மற்றும் தேரடி தெரு), அந்த தெருக்கள் வழியே பயணம் செய்யும் மக்களுக்கு மிகவும் இடையூறாக இருக்கிறது.

- . பெசன்ட் தெருவிலுள்ள கிரசன்ட் மருத்துவமனைக்கு எதிரே அமைந்துள்ள பொது சிறுநீர் கழிவறை பராமரிப்பற்று, மிகவும் மோசமான நிலையில் உள்ளது. அதனை சீர் செய்வது அத்தியாவசியமானது.

இராயப்பேட்டை:

- இராயப்பேட்டையில், குறிப்பாக அகத்திமுத்தன் தெருவில், மசூதிக்கு முன் எப்பொழுதும் குவிக்கப்பட்டிருக்கும் குப்பையால், மக்கள் பிரச்னைக்கு ஆளாகிறார்கள்.
- ஆய்வு மேற்கொண்ட தெருக்களில், குறிப்பாக சைவ முத்தையா தெருவில், கழிவு நீர் தேங்கியிருப்பதே மிக பெரிய பிரச்சனையாக கருதப்படுகிறது. அதற்கான நிரந்தர தீர்வு அமைய பெறுவது அவசியமாகும்.

# இணைப்பு I : சுகாதார மதிப்பாய்வு படிவம்

பெயர்:

முகவரி :

தொலைபேசி எண் :

## I. கழிவறை பயன்பாடு

1. எவ்வாறு மலம் கழிப்பீர்கள்?

   a) கழிவறையை பயன்படுத்துவேன்
   b) திறந்த வெளியினை பயன்படுத்துவேன்

2. எவ்விதமான கழிவறையை நீங்கள் பயன்படுத்துவீர்கள்?

   a) இந்திய பாணியிலுள்ள கழிவறை
   b) மேற்கத்திய நாட்டு பாணியில் அமைந்த கழிவறை
   c) மற்றவை

3. நீங்கள் எவ்வாறு கழிவறையை பயன்படுத்துவீர்கள்?

   a) வீட்டுடன் கழிவறை அமைந்துள்ளது
   b) பிற குடும்பங்களுடன் பகிரும்படியான கழிவறை
   c) பொது கழிவறைகள்
   d) மற்றவை

3.1. மற்ற குடும்பகளுடன் பகிரும்படியான கழிவறையென்றால், எத்தனை குடும்பங்கள் ஒரு கழிவறையை பகிர்வர்?

a) இரண்டு குடும்பங்களுக்கு ஒரு கழிவறை
b) மூன்று குடும்பங்களுக்கு ஒரு கழிவறை
c) மூன்றுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு கழிவறை

3.2. கழிவறை வீட்டுடன் இல்லையென்றால், நீங்கள் அதனை பயன்படுத்த எவ்வளவு தூரம் செல்ல வேண்டியுள்ளது?

a) நூறு மீட்டர் தூரம்
b) நூறிலிருந்து ஐநூறு மீட்டர் தூரம்
c) ஐநூரிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம்
d) ஒரு கிலோ மீட்டருக்கு மேல்

4. கழிவறையில் உபயோகிக்க தண்ணீர் கிடைகின்றதா?

a) ஆம்
b) இல்லை, உபயோகிக்க தண்ணீர் வெளியிலிருந்து கொண்டு செல்ல வேண்டும்.
c) மற்றவை

## <u>II. சாக்கடை வசதி</u>

1. உங்களுடைய பகுதியில் சாக்கடை வசதி எவ்வாறு உள்ளது? how is ur drainage facility

a) பாதாள சாக்கடையுடன், கழிவு நீர் செல்லும்படி இணைக்கப்பட்டுள்ளது.

b) திறந்த வெளி சாக்கடையுடன்,  கழிவு நீர் செல்லும்படி இணைக்கப்பட்டுள்ளது.

c) கழிவு நீர் வெளியேற்றுவதற்கு வழியில்லை.

d) மற்றவை

2. உங்களுடைய வீட்டிற்கு அருகில் தண்ணீரோ, சாக்கடை நீரோ தேங்கி உள்ளதா? Do you have stagnant water or sewage water near the house

a) ஆமாம்

b) இல்லை

2.1. ஆமாம் என்றால், எத்தனை நாட்களாக தேங்கி உள்ளது?

How long it is stagnant?

a) எப்பொழுதும்

b) மழை காலங்களில் மட்டும்

c) மற்றவை

3. மாநகராட்சி தொழிலாளர்கள் சாக்கடையை வழக்கமாக சுத்தம் செய்கிறார்களா?

Is corporation staff clean the sewage water?

a) ஆமாம்

b) இல்லை

3.1. ஆமாம் என்றால், எவ்வளவு முறை? If it is yes, how long

a) தினமும்

b) இரண்டு நாட்களுக்கு ஒரு முறை

c) ஒரு வாரத்திற்கு ஒரு முறை

d) எப்போதாவது

## III. திட கழிவுகள் (குப்பைகள்)

1. உங்கள் வீட்டின் அருகில் குப்பைகள் குவிந்துள்ளதா?

a) ஆமாம்

b) இல்லை

1.1. எத்தனை நாட்களுக்கு ஒரு முறை, உங்கள் வீட்டின் வெளியில் குப்பைகள் அகற்றப்படும்?

a) தினமும்

b) இரண்டு நாட்களுக்கு ஒரு முறை

c) ஒரு வாரத்திற்கு ஒரு முறை

d) எப்போதாவது

2. நீங்கள் உங்கள் வீட்டின் குப்பைகளை எப்படி அகற்றுவீர்கள்?

a) தெருவிலுள்ள குப்பை தொட்டியில் கொட்டுவேன்.

b) தெருவில் கொட்டுவேன்.

c) மாநகராட்சி தொழிலாளர் தினமும் வீட்டிற்கு வந்து சேகரிப்பர்

d) மற்றவை

2.1. மாநகராட்சி தொழிலாளர் உங்கள் வீட்டிலிருந்து குப்பைகளை சேகரிக்கிறார்கள் என்றால், எத்தனை நாட்களுக்கு ஒரு முறை செய்கிறார்கள்?

a) தினமும்

b) இரண்டு நாட்களுக்கு ஒரு முறை

c) ஒரு வாரத்திற்கு ஒரு முறை

d) எப்போதாவது